# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

| | | |
|---|---|---|
| VOL. 3. | MADRAS: JUNE 1901. | No. 4. |
| புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901வரு ஜூன்மீ | இல. 4. |

## மாயாபுரி விநோதக் கதை.

சௌந்தரவல்லி கலகலவென்று நகைத்துத் தோழீ! தெய்வம் பார்த்தென்ன செய்தாலும் அதைத்தடுப்பார் யார்? நம்மாலகுமோ? வந்ததையனுபவித்தே தீரவேண்டும். இந்தக் கொடிய சிறையிலிருந்து தனியே வாணாள்கழித்து வருந்துவதைவிடக் காட்டுமிருகங்களுக்கு இரையாய் விடுதல் எனக்கு மிகச்சந்தோஷமே. அதைக்குறித்து நான் வருந்தவில்லை. களிப்படைகின்றேன். என் சிறைமீட்சியைக் குறித்து நீயும் மகிழ்ந்திரு; கவலைப்படாதே; ஆனால் பெற்று வளர்த்ததாய் தந்தையருக்கிந்தத் துரெண்ணமுண்டானதற்குமட்டும் சிறிது வருந்துகிறேன். சகல சாஸ்திரங்களின் உண்மையைத் தெரிந்திருந்து அரசபுரியும் பெரியோருக்குப் புத்திசொல்வதுயார்? என்று கம்பீரமாகக் கூறியதுகேட்ட தோழி மறுமொழி பகராமல் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து, தான் வந்தசங்கதி யெங்கே வெளிப்படப் போகிறதோ வென்று பயந்து விடைபெற்றுக் கொண்டு போய்விட்டாள். பிறகு சௌந்தரவல்லி தான் கேட்ட வார்த்தையைக் குறித்துச் சிறிது வருந்திப் பின் நாளைப்பகலில் நமது கணவன் வாராதிரார். ஆகையால் அப்பொழுது பேசிக்கொள்வோ மென்று தன் கணவன் திருவடியைச் சிந்தித்துக்கொண்டு கவலையற்றுத் துயின்றாள். மறுநாளுதயத்தில் பெட்டிதயாராகி வந்துவிட்டது. அரசனும், அரசியும் அதைப்பார்வையிட்டுப் பின் மந்திரியை அழைத்து இன்றிரவு விடியுமுன் என் கட்டளையைத் தடையற நிறைவேற்றி விடென்று கண்டிப்பான உத்தரவுகொடுத்துப் போய்விட்டார்கள். மந்திரி மனம் வருந்தி அரசனுடைய அநீதிக்கு இரங்கி, என்செய்வது? எஜமான் உத்தரவை நிறைவேற்றுவதே வேலைக்காரன்கடமையாதலால் அரசன் ஆக்ஞைப்படிநடப்போம். பழிபாவத்துக்கு அவனே பாத்திரனாகட்டும் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு, இராப்பயணத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்துவைத்துக்

கொண்டு, இரவுப்பதினைந்து நாழிகைக்குமேல் அரசன்கட்டளையை நிற வேற்றுகிற தென்று தீர்மானஞ் செய்திருந்தான்.

இங்கேயிப்படியாயிருக்க மாயாபுரியில் ஜகதீசன்மத்தியான்னம் தேவ பூசை முடித்து போஜன மருந்தித்தன் மனைவியோடு விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கையில் அவளை நோக்கி என்கண்ணே! மங்களாம்பா! உனக்கு ஒரு சந்தோஷம் சொல்லுகிறேன்என, அவள் அது என்ன அருள் செய்ய வேண்டுகிறேனென்றாள். பெண்ணே! இன்றுதினம் உன்சகோ தரி சௌந்தரவல்லியை அழைத்துக்கொண்டு வரவிரும்புகிறேன். உன் கருத்தென்ன வென்றான். அவள் நகைத்துப் பிராணநாதா! இதென்ன வேடிக்கை? எனக்கு அவளைப்பார்க்கவேண்டு மென்கிற ஆவல் மிகுதி யாக இருக்கிறது. தங்கள் திருவுளத்துக்கெதிர் பார்த்திருந்தேன்; அவள்வந்து விட்டால் இருவரும் மன்மொத்து விளையாடிக் கொண் டிருப்போம். என்சகோதரி யிருக்கையில் எனக்கு வேறு தோழி மார் என்னத்துக்கு? அரண்மனையில் எத்தனைகாரியங்களிருக்கின்றன? அவைகளை நாங்களிருவரும் பங்குபிரித்துக்கொண்டு எளிதாகச்செய்து விடுவோம். தேவரீர் என் மனதைச்சோதிக்கிறாப் போலக்காண்கிறது. அப்படிச்சோதிக்கவேண்டாம். இந்த க்ஷணத்திலேயே போய் அழைத் துக்கொண்டு வாருங்களென்று மனக்களிப்புடன் விடைபகர்ந்தாள். ஜகதீசன் என்கண்ணே நானின்றுதானா உன்மனதைச் சோதிக்கப்போகி றேன். அப்படியல்ல; விளையாட்டுக்காகச் சொன்னேன். அவள் இப் பொழுது ஆறுமாதகர்ப்பம். அவள் தாயும் தந்தையும் அந்த அவமானத் துக்காக அவளைக்காட்டில் கொண்டுபோய் விடத்தீர்மானித்து, இன்றிரவு பதினைந்து நாழிகைக்குமேல் அதைநிறைவேற்றப் போகிறார்கள். அதற்கு முன் அவளை யிங்குகொண்டுவந்து விடவேண்டும் என்றான். அதுகேட்டு மங்களாம்பாள் நகைத்து நல்ல காரியஞ்செய்தார்கள். என்தாய் தந்தை யர்கள் மிகநல்லவர்களென்று தோன்றுகிறது. நிற்கட்டும்; இந்தச்சமா சாரம் அவள் காதில் பட்டிருக்கவும்கூடுமே? அதனால் அவள் மிகவருத்தப் பட்டுக்கொண்டிருப்பாள். ஆகையால் தேவரீர் சீக்கிரம்போய் அழைத் துக்கொண்டு வாருங்கள். அதுவரைக்கும் நான் என்தோழியோடு விளை யாடிக்கொண்டிருப்பேன். வரும்வழியை எதிர்பார்த்துக் கொண்டிருப் பேன். ஐயோ! பாபம்; என்ன எண்ணிவருந்துகிறாளோ வென்று மனம் வருந்தி, இரக்கத்தோடும் சொல்ல ஜகதீசன் பெண்ணே! அவளுக்கு யாதொரு கெடுதியும்வாராது. நான் போய்வருகிறேன் என்றான். மங்க ளாம்பாள் எழுந்திருந்து உள்ளேபோய் உயர்ந்த ஆடையாபரணங்கள் கொண்டுவந்து கொடுத்து, அந்தப் பாவிகளுடைய சொத்து இங்கேவர

வேண்டாம். அங்கேயே கழற்றியெறிந்துவிட்டு அவளை யிவ்வாடை யாப ரணங்களால் அலங்கரித்து இங்கே அழைத்துக்கொண்டு வாருங்களென் ருள். அவன் தன் மனைவியின் நற்குணங்களுக் கதிசயப்பட்டு அவளிடம் விடைபெற்றுக்கொண்டு மார்த்தாண்டபுரம்போய் யாதுசெய்வதென்று பல பல எண்ணமிட்டுக்கொண்டு வருந்துகிற சௌந்தரவல்லி முன் போய் நின்றான். அவள் மிக ஆனந்தத்தோடும் எதிர்கொண்டழைத்துப் போய்ப் பீடத்திலிருக்கச்செய்து உபசரித்து நடந்த சமாசாரங்களைக்கூறி மனம் வருந்தினாள். ஜகதீசன் பெண்ணே! நான் முன்னமே சொல்லவில்லையா? இன்று தான் நீ மாயாபுரிக்கு வரவேண்டியநாள். உன் தந்தை யளித்தவஸ் திரா பரணங்களைக்கழற்றி இங்கேயேவைத்துவிட்டு, இவற்றையணிந்துகொ ண்டுவரும்படி மங்களாம்பாள் கொடுத்தனுப்பினாள் என்று கொடுக்க, அவள் உடனேயெழுந்திருந்து தன்னிருகையாலும் வாங்கிக் கண்களிலொற்றிக் கொண்டு, மனமகிழ்ந்து அவற்றை யணிந்துகொண்டு தன்கணவன் பக்கத் தில் வந்துட்கார்ந்தாள். அஸ்தமித்தபின் இருவரும் தேவாமுத போஜ னம் அருந்தித் தாம்பூலந்தரித்துக்கொண்டு விநோதமாகப்பேசிக் கொண் டிருக்கையில் சௌந்தரவல்லிக்குத் தன்னையறியாமல் நித்திரை தோன்றித் தன்கணவன் தோளின்மீது சாய்ந்துகொண்டு தூங்கிப்போய்விட்டாள். பிறகு சிறிது நேரம் கழித்துக் கண்திறந்து பார்த்து நாலுபக்க மும் நோக்கித்தான் தன்நாயகன் தோளில் சாய்ந்து கொண்டிருப்பதை யும் அவன் பக்கத்தில் திருமகள் நாணும் எழில்நலம் கனிந்து தங்க மொத்தொளிருந்த திருமேனிவாய்ந்த மங்கைப்பருவத்துப் பெண்ணரசி மந்தகாச முகாரவிந்தத்துடன் வீற்றிருப்பதையுங்கண்டு, புத்திசாலியாகை யால் இது மாயாபுரி என்றும், பக்கத்திருப்பவள்தான் மங்களாம்பாள் ஆகவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, திடீரென்று எழுந்திருந்து மங்களாம்பாள் பாதத்தில்வணங்க, அவள் இருகையாலுங் கட்டித்தழுவிப் பக்கத்திருத்திப் பலநாட்பழகினவளைப்போல அளவிளாவி மகிழ்ந்தாள். சௌந்தரவல்லி அக்காள்! நான் உன்திருவடிநிழலில் வந்து அண்டிவிட் டேன். நான்செய்யுந்தப்புத்தவறுகளைக் கவனியாமல் என்னைப்பரிபாலிக்க வேண்டுகிறேன்என, ங்களாமம்பாள் மகிழ்ந்து சௌந்திரவல்லீ நமக்குக் குற்றம் குறை யென்ன விருக்கப் போகிறது? நாமிருவரும் ஒரு எஜ மானனுக்குட்பட்ட வேலைக்காரிகளே யாதலால் இருவரில் உயர்வு தாழ்வு கிடையாது. நாமிருவருமொருமித்து நம்எஜமானனுக்கு மனக்களிப்போடு ஊழியஞ்செய்வோமென்று கூறி அவளைமகிழ்வித்தாள். சௌந்தரவல்லி ஆனவள் மங்களாம்பாளுடைய குணாதிசயங்களுக் காச்சரியப்பட்டு இந்த ப்புண்ணியவதியின் பேச்சைக்கேட்டு, அவளுக்குப்பணிந்து நடப்பதே

நமக்குப் பெரும்பாக்கியமென்று கருதிமகிழ்ந்திருந்தாள். இப்படியாக இருமனைவிமாரும் பணிவிடைசெய்ய, ஜகதீசன் மாயாபுரியில் தன்னரசு நடாத்திமகிழ்ந்திருந்தான்.

இங்கேயிப்படியிருக்க, மார்த்தாண்டபுரத்தில் மந்திரியானவன் இராத்திரி குறிப்பிட்ட காலத்தில் வந்து கன்னியாமாடத்தினுட்போய் ஒருவழி பிடித்துக்கொண்டு உள்ளே புகுந்துபார்க்க, உள்ளே ஒருவருமில்லாமையால் ஆச்சரியப்பட்டு, நாலுபுறத்திலும் சுற்றிப்பார்த்து இராஜபுத்திரியின் ஆடையாபரணங்களைக் கண்டெடுத்து, இது வென்னவிந்தை? உள்ளேயிருந்த பெண் எப்படி வெளியில் போயிருக்கக்கூடும். நாமல்லவோ இப்பொழுது வழியுண்டாக்கினோம். முன்பு சால்கம் தவிர வேறுவழியில்லை. இது தெய்வச்செயலோ? இராட்சதர் செயலோ? தெரியவில்லையே யென்று கலங்கி அரசனுக்கறிவிக்க, அரசன் தக்ஷணம் அவ்விடம் வந்து பார்த்து வியந்து, உடனே யநேகதூதர்களை ஏவி யெங்குந்தேடிப் பார்த்துக்கண்டு பிடித்துவந்து சமாசாரங்கள் தெரிவியுங்கள் என்று ஆக்ஞாபித்து அனுப்பிவிட்டு மந்திரியோடு அரண்மனைபோய்ச் சேர்ந்து பலவாறு யோசித்துக்கொண்டிருந்தான். மறுநாள் சாயங்காலப்போதில் தூதர்கள் வந்து சுவாமீ! எங்கும் காணவில்லை. கண்டுபிடித்து செல்வதற்கு யாதொரு அடிச்சுவடுகூடத் தென்படவில்லை என்று கூறிப்போனார்கள். பிறகு பிரபாகரன் தன் மந்திரியை யழைத்து மந்திரீ! இதென்ன விந்தையாயிருக்கிறது? நமது குமாரத்தி எப்படிபோயிருப்பாள்? உனக்கென்ன தோன்றுகிறது? என்று கேட்க, மந்திரி மஹாராஜாவே! தேவர்கள் அல்லது அசுரர்கள் செய்த வேலையாகுமே தவிர மனிதர்களால் நடந்ததல்ல வென்று நிச்சயமாய் நம்புங்கள். நமது பெண் தெய்வசிந்தனை செய்துகொண்டு அருந்தவம் புரிந்தமையால் யாரோ ஒரு தேவனே யழைத்துப்போயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் இரகசியமாய்ச் செய்யத்துணிந்தகாரியந் தெரிந்துகொள்ளுஞ்சக்தி மனிதர்களுக்கில்லை. தவிர கட்டிடத்தில் எவ்விடத்திலும் திறப்புக்காணப்படவில்லை. நானே புதுவழியுண்டாக்கிக்கொண்டு உட்பிரவேசித்தேன். அந்தப் புதுவழியைத் தவிர வேறு வழியில்லாதிருப்பதை மஹாராஜாவே நேரில் தெரிந்து கொள்ளலாமென்று கூறினன். பிரபாகரனுக்கு ஒன்றுந்தோன்றாமல் அந்தப்புரம்போய்த் தன் பத்தினி கமலாட்சிக்கு இந்தச் சமாசாரந் தெரிவித்து மௌனமாயிருந்தான். அந்தம்மாளுக்குத் தன் செல்வக்குழந்தை துன்பத்தினின்று விடுபட்டதற்கு மனதுக் கடங்காத மகிழ்ச்சியும், இதனால் என்ன தீமைவிளையுமோ வென்கிறதுக்கமு மடைந்து தன் கணவனுக்குப் பலவகையான ஆறுதல்சொல்லித் தேற்றினள். இந்தச்சமாசாரம் பட்

டணமெங்கும் பரவவே அதுகேட்டவர்களிற் சிலர் அரசனையிகழ்ந்து இராஜபுத்திரியைப் புகழ்வாரும், சிலர் இராஜபத்தினியைப் புகழ்ந்து களிப்பாரும், சிலர் மந்திரிசெய்த தந்திரமாயிருக்கலாமென்று அவனை மெச்சுவாரும், சிலர் இதனுல் இராஜ்யத்துக்கென்ன சம்பவிக்குமோ வென்று மனம் மறுகுவாரும், சிலர் தெய்வச்செயலென்று கருதிமகிழ்வாரும் ஆனுர்கள். நகரத்தில் இதைத்தவிர வேறு பேச்சேயில்லை. எல்லாருக்கும் கவலையுண்டாயிற்று. இவ்வாறு நான்குமாதங்களாயின.

நிற்க மாயாபுரியில் சௌந்தரவல்லி பத்து மாதமானவுடன் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒருபுத்திரனைப் பெற்றுள். ஜகதீசன் அதற்குச் செய்ய வேண்டிய ஜாதகர்மாதிகளை வைதீகமுறைதவருமற் செய்து தன்பத்தினிமார்களுடன் மகிழ்ந்து, அக்குழந்தைக்குக் கிருபாகரன் என்று பெயரிட்டு மிக அன்போடு வளர்த்துவந்தான். அக்குழந்தைக்கு ஒருவயதாயிற்று. ஒருநாள் ஜகதீசன் தன்பத்தினி மார்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் சகலாபரணுலங்காரத்துடன் தவழ்ந்து வருகிற குழந்தையைக் கண்டு மங்களாம்பாள் ஓடிவந்து தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சிமுத்தாடி மகிழ்ந்தாள். அப்பொழுது சௌந்தரவல்லி சற்று முகம்வாடியிருப்பதை மங்களாம்பாள் பார்த்து இதென்ன புதுமை நாம் குழந்தையை எடுத்ததேயொழிய வேறென்றும் செய்பவில்லையே? இதற்குத் தங்கை மனம்வருந்தினுளே யென்று கவலைகொண்டிருந்ததை ஜகதீசன் அறிந்து கலீரென்று நகைத்து என் கண்ணே மங்களாம்பா நீ யேன் மனம் வருந்தினுய்? உன் தங்கை தனது தாயாரை நினைந்து துக்கிக்கிருள். உன்னிடத்தில் யாதொருகெட்ட நினைவும் கொள்ளவில்லையென்று சொன்னுன். சௌந்தரவல்லி அதுகேட்டு மனங்கலங்கி உடனே யெழுந்திருந்து தமக்கையின் பாதத்தில் பணிந்து அக்கா! என் தந்தையின் செய்கையெல்லாம் எனது தாயாருக்குச் சம்மதமில்லை. என்னிடத்தில் அதிகப் பிரியமுள்ளவள். இந்தக்குழந்தை பிறந்து விளையாடிக்கொண்டிருப்பதை அவள்பார்த்துச் சந்தோஷிப்பதற்கில்லாமற் போய்விட்டதே யென்று மனம்வருந்தினேனே தவிர உன்னைக்குறித்து யாதொன்றும் நினைக்கவில்லை. நீயே யெனக்குத் தாயும் தமக்கையும் மற்றுமுள்ள பந்துக்களுமாயிருக்க உன்னிடத்திலே நான் கெட்ட அபிப்பிராயங்கொள்வேனே? என்று இனியவசனங்கூறக்கேட்டு மங்களாம்பாள் மனம் வருந்தித்தன்கணவனை நோக்கிச் சுவாமீ! பெண்களுக்குத் தாயினிடத்தில் அதிக நேசவிசுவாசமிருப்பது வாஸ்தவந்தான். என் தங்கை தாயை நினைந்து வருந்துவதும் நியாயமாமேயாம். அவளுடைய துக்கநிவிர்த்திக்கு யாதொரு பரிகாரமுமில்லையோ வென்றுள். ஜகதீசன் மங்களாம்பாளினது தயாளகுணத்துக்கு வியந்து பெண்ணே! உனக்கு மனமிருந்தால் பரி

காரமுண்டு. நீ கவலைபடவேண்டாம். இன்று இரவில் இங்கேயழைப்பித்துக் காட்டுகிறேனென்று கூறியவளை மகிழ்வித்தான், சௌந்தரவல்லியும் மிகக்களிப்படைந்தாள். இரவு வந்தவுடன் மூவரும் போஜனமுண்டு களித்து விளையாடிக் கொண்டிருக்கையில் நாழிகை பனிரண்டாயிற்று. அப்பொழுது ஜகதீசன் சௌந்தரவல்லீ! அதோ உன்தாயார் நித்திரைசெய்கிருள். அவளைத்தட்டியெழுப்பி உபசாரஞ்செய்து பேசிவா. நமது உண்மை ஒன்றும் சொல்லாதேயென்று அனுப்பினுன். அவளும் மனதுக்கடங்காத மகிழ்ச்சியோடு போகையில் அவள் தாயார் விழித்துக்கொண்டு பக்கத்தில் தன்கணவனில்லாதிருப்பதையும், தான் என்றும் பார்த்திராதவோர் புதிய அரண்மனையிலிருப்பதையும் பார்த்து ஒன்றுந்தோன்ருமல் பலவகையாக யோசித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது சௌந்தரவல்லி கிட்டவந்து அம்மா! என்று கூப்பிட்டு நமஸ்காரஞ்செய்தாள். தாயார் திடுக்கிட்டெழுந்திருந்து தன் மகளைக்கட்டித்தழுவி முத்தமிட்டு ஆ! என் கண்ணே! நீ க்ஷேமமாயிருக்கிருயா? நீ எவ்விதம் ஆனுயோ வென்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்த என் வயிற்றில் பால் வார்த்தாயோ? நான் உன்னைக்காணப்பெற்றது பூர்வஜன்மத்துப்புண்ணிய பலத்தினுலல்லவோ என்று கூறிக்கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கையில் இணையில்லாத அழகுபொருந்திய ஒரு குழந்தை தவழ்ந்து வரப்பார்த்துக்குழந்தாய்! இது யார் குழந்தையென்று கேட்டதும் அவள் குழந்தையைத் தூக்கிக்கொண்டுவந்து அம்மா! இது என் செல்வக்குழந்தை யென்றுகூறி மடியில்வைத்தாள். தாயார் மகளையும் குழந்தையையும் பார்த்து பார்த்து மகிழ்வடைந்து ஒன்றுஞ்சொல்ல மாட்டாதவளாய்ப் பிரமித்து நின்று, பின்பு தெளிவடைந்து குழந்தையை முத்தமிட்டு விளையாடிக் கொண்டிருக்கையில் சில தாதியர் சொர்ணத்தட்டுகளில் மதுரமான சிற்றுண்டிகளையும், கனிவர்க்கங்களையும் கொண்டுவைத்துப்போக அதைத் தன் புத்திரியின் விருப்பத்தின்படி கமலாட்சி புசித்து மகிழ்ந்திருக்கையில் சௌந்தரவல்லி எழுந்திருந்து அம்மா அதோவருகிற மஹாபுருஷர்தான் என் பர்த்தாவென்று கூறினுள். அப்பொழுது ஜகதீசனும்வந்து தன் மாமிக்கு வந்தனம்செய்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். கமலாட்சி தன் மருமகனுடைய ரூபலாவண்ணியத்தையும், குணதிசயத்தையும்கண்டு மகிழ்ந்து அவனதுவரலாறு முதலியவற்றைக்கேட்க விருப்புற்றிருப்பதைத் தெரிவித்தவுடனே யவளுக்கு அதிக நித்திரையுண்டாகித் தன்னை மறந்து நித்திரை போய்த்திடுக்கிட்டு விழித்துப்பார்க்கத்தான் தனதுகணவனது பக்கத்தில் படுத்திருக்கக் கண்டு மிகுந்த ஆச்சரியமும், பயமும் உடையவளாகிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அரசன் கண்விழித்துப்பார்த்து அடி! பெண்ணே! உனக்கு நித்திரை வரவில்லையோ! நான் என்ன சொன்னுலும் கேட்கமாட்டேனென்

கிருயே, உன் கவலையைவிட்டொழி. அதனல் என்ன பிரயோசனம்? எனக்கோ அளவில்லாத கவலைகளும் துக்கமுமிருக்கின்றன. அவையெப்படி ஆறும்? உனது மலர்ந்த முகத்தாலும், இனியவசனங்களாலும், உபசாரங்களாலுமல்லவோ தீரவேண்டும். நீயும் கவலைப்பட்டு வருந்தியிருந்தால் என்துக்கம் எப்படி நிவிர்த்தியாகுமோ தெரியவில்லை?

இன்னும் வரும் **தேவதஞ்சரியம்மாள்.**

---

## சத்தியவதி சரித்திரம்.

### 1-ம் அதிகாரம்.

—o—

மார்கழி மாதம் ஆரம்பித்தப்டியால் குளிர்காலத்து விடுமுறை ஞாபகம்வந்து, சத்தியவதி நாராயணமூர்த்தியினது வரவையெதிர் பார்த்துக்கொண்டு தினமொருயுகமாய் கழித்துக்கொண்டுவந்தாள். ஒ ஸ்திரீரத்தினங்களே! இந்த வாக்கியத்தைப் படித்தவுடன் சத்தியவதி யாரோ,நாராயணமூர்த்தி அவளுக்கு என்ன ஆகவேண்டுமோ தெரிந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் ஆவல் கொள்ளக்கூடும். உங்களுக்கு அவர்கள் கதையைச்சொல்லப்போகிறேன். ஆனல் அதில் சித்திர விசித்திரங்கள் இருக்கும் என்று மாத்திரம் நீங்கள் எதிர்பார்க்கப் போகிறீர்கள். நமது புராணங்களிலிருப்பதுபோல் பத்துத்தலை மனிதர்களும், ஆயிரம் கையுடைத்தவர்களும், சமுத்திரம் முழுவதும் ஒரே விழுங்காய் குடிப்பவரும், பூமியைப் பாய்போல் சுருட்டுவோர்களும், இதில் யாரும் வரமாட்டார்கள். அப்படிக்கொத்த அதிசயங்கள் நடந்த காலங்களும் அவைகளனைத்தையும் நம்பின காலங்களும் வெகு வருஷங்களுக்கு முன்னேயே கழிந்துவிட்டன. நமது சிங்காரக்கதைகளி லிருப்பதுபோல் இதில் வனசஞ்சாரங்களைக் குறித்தும் ஜலக்கிரீடைகளைக் குறித்தும் காதலர் காதலிகள் அன்னியோன்னியங்களைக்குறித்தும் இன்னும் இத்தகைய வர்ணனைகள் ஒன்றும் காணப்படா. ஸ்திரீகள் சுயர்ச்சையாய்த் தங்கள் தோழிகளுடன் வனசஞ்சாரம் செய்யுங்கதைகள் கனவிற்காணும் கதைகள்தான்; ஜலக்கிரீடைகள் புஸ்தகங்களில் தானிருக்கின்றன. இப்போது குழந்தைகள் பொம்மைக்கலியாணம் செய்வதுபோல, தாய்தகப்பன்மார் தாங்கள் பார்த்து சந்தோஷமடைவதற்காகபேசத் தெரியாக் குழந்தைகளுக்குகலியாணம் செய்து அவர்களைச்

சிங்காரித்துப்பல்லக்கில் ஊர்கோலம் செய்து இன்னும் வேடிக்கைகளெல்லாம் செய்கிறார்கள். ஆகையினால் இந்த நிஜமான சரித்திரத்தில் இக்காலத்தில் நமது குடும்பங்களில் நமது அனுபவத்தில் சாதாரணமாய் காணும் விஷயங்கள்தவிர இந்திர ஜாலங்கள் ஒன்றும் காணப்படா. ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கும் கற்பனைக்கதைகளைக்கேட்ட உங்கள் காதுக்கு இந்த உண்மையான கதை இனிமையாயிருக்குமானாலும் இதைப்படித்து ஆநந்திக்கவும் இதில் வர்ணிக்கப்பட்டிருக்கும் கதாநாயகர் நாயகிகளுடைய நடவடிக்கைகளை யனுசரிக்கவும் உங்களுக்கு வேண்டிய சுதந்தரமுண்டு.

சத்தியவதி நாராயணமூர்த்தியின் பெண்சாதி; முக்கொண்டா அக்கிரஹாரத்தில் வசிக்கும் லக்ஷ்மீநாராயணபந்துலுவுடைய இரண்டாவது மருமகள், முக்கொண்டா அக்கிரஹாரம் என்பது கோனசீமயம் தமலாபுரத்திற்கு அருகிலிருக்கிறது. லக்ஷ்மிநாராய்ணபந்துலு பரமசாது, அக்கிரகாரத்தில் அவரிருக்குமிடங்கூட தெரியாது. சிலருக்கு அவருடையபேர்கூடதெரியாது. ஆயினும் அந்தகிராமத்தில் அவருடைய மனைவியின் பெயரைஅறியாதவர்கள் யாருமில்லை. அந்தம்மாள் கிணற்றிற்குவரும்போதே ஜலமெடுக்கும் சூத்திரஸ்திரீகளெல்லாம் மேலேஜலம்விழுந்தால் யசோதம்மாள் சண்டைபிடிப்பளென்று நீர்க்குடங்களை மேலே எடுத்துக்கொண்டு தூரமாய் ஒதுங்கி, நின்று கொள்வார்கள்; மடிஜலதிற்காக ஏரிக்குப்போனால் பிள்ளைகள் இவள்வரவை தூரத்திலிருந்து பார்த்து பயத்தோடு எல்லோரும் நீந்துவதை நிறுத்திவிட்டு ஓடிப்போவார்கள். கிராமத்தில் குழந்தைகள் யாராவது ஆகாத்தியம்செய்தால் யசோதம் மாளிடத்தில் விட்டுவிடுவேனென்று தாய்மார்கள் அவர்களை பயமுறுத்துவார்கள். அவளுடைய பிரசித்தியினால் கிராமத்தில் அநேகர் லட்சுமிநராயண பந்துலுவை யசோதம்மாள் புருஷனென்பார்களேயொழிய யாரும் பேர்சொல்லி அழைக்கமாட்டார்கள்.

லக்ஷ்மீநாராயண பந்துலுவுக்கு நான்கு குமாரர்கள். அவர்களில் பெரியவன் பெயர் வெங்கடேஸ்வரன், இரண்டாவதவன் பெயர் நாராயணமூர்த்தி என்று உங்களுக்கு முன்பே தெரியும், மூன்றாவது குமாரன் ராமசுவாமி, அவனுக்கு இளையவன் பெயர் சுப்பிரமணியன். இந்த நான்கு புத்திரர்களைத்தவிர இரண்டு பெண்களுண்டு. அவர்களுள் பெரியவள் சாவித்திரி சின்னவள் சீதா.

வெங்கடேஸ்வரனுக்கு இப்பொழுது 27 வயது. நமது தேசவழக்கத்தின்படி சிறுவயதிலே காளிதாசதிரியம் படித்தானே யொழிய காவிய பாடங்களில் அவனுக்கு சிரத்தையில்லாமல் போனபடியினாலும், படிப்பதைப்பார்க்கிலும் குரு உபசாரம் செய்தலிலேயே விசேஷகாலத்தை கழித்தமையாலும், சம்ஸ்கிருதம் அவனுக்கு பிடிக்கவேயில்லை; ஆகையால் கொஞ்சம் கணக்குப்போடுவதற்கும், செவ்வையாய் எழுதுவதற்கு மாத்திரம் அவன் கற்றுக்கொண்டான். அவனிப்பொழுது ஒரு கணக்கனிடத்தில் குமாஸ்தாவாகவிருந்து மாதம் 10 ரூ சம்பாதித்துக்கொண்டிருக்கிறான். அவன் மதத்தில் ஸ்மார்த்தனுக விருந்தாலும் வைஷ்ணவர்களுடைய சகவாசத்தினல் விஷ்ணு பக்தி முதிர்ந்து கழுத்து நிறைய துளசி மாலைகளையணிந்துகொண்டும், பெரியநாமங்களைத் தரித்துக்கொண்டும் ஹரிபக்தனென்று சொல்லிக்கொண்டிருந்தான். அவன் மனைவியின் பெயர் சுந்தரம்மாள். அவளுக்கு படிப்புவாசனையில்லை, ஆகையினல் சிலசமயங்களில் சண்டைபோட்டுக் கொண்டிருந்தாலும் புருஷன் பெண்சாதியிருவரும் மனங்கலந்து ஒருவார்த்தையாயிருப்பார்கள். அந்ததம்பதிகளுக்கு ராமானுஜமென்ற இரண்டுவயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் உண்டு.

இன்னும் வரும். K. G. V.

---

## ஸிம்பலேன்.

வகடீரியஸ் :—ஐயோ ! அதிர்ஷ்டம் நிலையில்லாததா யிருக்கிறதே !

பெலாரியஸ் :—நான் முன்னுரைத்தபடி என்பேரில் கொஞ்சமாகிலும் குற்றமில்லை. நான் ஸிம்பலீனுக்கு விரோதமாய் ரோமன் ஜாதியாரோடு சேர்ந்திருந்தேனென்று இரண்டு துரோகிகள் சத்தியம்பண்ண, நான் உள்ளதைச்சொல்லியும் என்னை மதியாது அத்துரோகிகள் சொன்னவற்றை அரசன் நம்பி என்னை நாட்டைவிட்டுப் போவென்று துறத்திவிட்டான். அது முதல் இருபது வருஷகாலமாக இந்தக்குகையை வீடாகவும், இந்த மலையை எனக்கு உலகமாகவும் நினைத்துக்கொண்டு வசிக்கிறேன். இந்த இடத்தில் என்னுடைய இளமைப் பருவத்திலிருந்ததைப்பார்க்கிலும், அதிக தெய்வபக்தியோடு ஒருவருடைய கட்டுக்குள்படாமல் சுயேச்சையாயும் யோக்கியமாயும் காலத்தைக்கழித்துக்கொண்டு வருகிறேன். வேடர்களுக்கு இதைப்பற்றிப் பேசவேண்டாம். நம்முடைய காரியத்தைப்பார்ப்போம். சீக்கிரம் மலைக்குப்போய் வேட்டையாடி யார்முதலில் மிருகத்தையடிக்கிறானே அவன் தான் இன்றையவிருந்துக்கு பிரபுவாகவேணும்; மற்றவர்கள் அவனுக்கு

வேலைசெய்து மாம்சத்தைத் தயாராக்கிக் கொடுக்கவேணும். பெரிய இடங்களில் பயப்படுவதுபோல யாராவது விஷத்தைச் சேர்ப்பார்களோ வென்று இங்கேநாம்பயப்படவேண்டாம். நான் உங்களைப் பள்ளத்தாக்குகளில் சந்திப்பேன்,

என்று சொல்ல இரண்டு பிள்ளைகளும் போய்விட்டார்கள். அப்பொழுது,

**பேலாரியஸ்** :—இயற்கையாயுள்ள குணங்களைமறைத்தல் எவ்வளவு அரிதாயிருக்கிறது ! இந்தப்பிள்ளைகளுக்கு, தாங்கள் யாருடைய பிள்ளைகளென்று சிறிதேனும் தெரியாது. அவர்கள் என்னுடையபிள்ளைகளென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை இவ்வளவு இழிவான குகையில் வளர்த்தாலும் அவர்களுடைய எண்ணங்களோ அரண்மனையின் கூரையைப்பார்க்கிலும் உயர்ந்து போகின்றன. அற்பகாரியங்களில்கூட சாதாரணப்பிள்ளைகளைப் போலிராமல் சிற்றரசர்களைப்போல் எண்ணம்போகிறது. பாலிடோர்என்று நான் கூப்பிடும் இந்தகைடீரியஸிடத்தில் என்னுடைய வீரத்தன்மையைச் சொல்லும்போது, தன்னுடையமனதை வேறேயிடத்தில் செலுத்தாமல் நான் சொல்லுகிறதைக் கவனவாய்க்கேட்டு அதிக உற்சாகத்துடன் குதித்துவிளையாடுகிறான். திருஷ்டாந்தமாக—"என்னுடையசத்துரு என்கத்திக்கிரையாகி இவ்விதமாக என்காலில் விழுந்தான். நான் இவ்விதமாக அவன் கழுத்தில் என்காலால்மிதித்தேன்." என்று சொல்லும்போது சிற்றரசர்களுக்கு இயற்கையாயுள்ள இரத்தம்விரைவில் அவன் முகத்தில் ஓடி, வேர்வையால் முகமெல்லாம் நீர்த்துளியாக, நரம்புகளெல்லாம் படபடென்று துடிக்க, நான் சொன்னவற்றைச் செய்பவனைப்போல் பாவனைகாட்டுவன். காட்வால் என்று நான் கூப்பிடும் இவன்தம்பியாகிய ஆர்விராகஸ் என்பவனும் கைடீரியஸுடைய குணங்களையுடையதாய் நான் கதை சொல்லும்போது, அதையுற்றுக் கேட்டு நெஞ்சு படபடெனத்துடித்தும் தன்தைரியத்தைக் காட்டுவன். ஏ, ஸிம்பலீன், அநியாயமாக என்னை நாட்டைவிட்டுப் போகச் சொல்லி என்சொத்துகளை யிழக்கச்செய்து தெய்வத்துக்கும் உன் மனதுக்கும் நன்றாகத்தெரியும். அதினால் நீயடைகிற துன்பமோ நான் படுகிறதைபார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாக விருக்கிறதென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இவ்விதம் அனேக காலமாக வேட்டையாடித் தங்களுடைய காலத்தைக்கழித்துக் கொண்டுவந்தார்கள். இமொஜன் குகையில் வந்த தினத்திலும் வேட்டையாட

ப்போய், அவள் தின்பண்டங்களைப் புசித்துக் களைப்புதீர்ந்திருக்கிற சமயத்தில் இம்மூவர்களும் வேட்டைகழிந்து திரும்பி யங்கேவர,

**பேலாரியஸ்** :—ஏ, பாலிடோர், இன்றையதினம் வேட்டையில் நீசமர்த்த ஞனுய். ஆகையால் இன்று விருந்துக்கு நீ பிரபுவாயும் காட்வாலும் நானும் உன்னுடைய வேலைக்காரர்களாயு மாய்விட்டோம். இது நாம் செய்த உடன்படிக்கை நமக்குப் பின்னுல் வரக்கூடிய வெகுமதி யையும் லாபத்தையும் கருதாமற்போனுல் வேலைசெய்கிறது கஷ்டமா கத் தோன்றும். வாருங்கள், நம்முடைய பசியோ அதிகமாய்விட்ட து. பசியிருந்தால் எந்தப்பதார்த்தத்தையும் தேவாமிர்தம்போல் புசி க்கலாம்; ஏனென்ருல் "நித்திரை சுகமறியாது" என்ற பழமொழி யைக் கேட்டிருப்பீர்கள். களைப்புள்ளவனுக்கு ஒருகல் நல்ல மெத்தை யாகத்தோன்றும்; சோம்பேறிக்கோ நல்ல மெத்தையும் கல்லாகத் தோன்றும். ஆகையால் நாம் இப்போது வேட்டையாடிக் கொண்டு வந்ததைத் திருப்தியுடன் புசிப்போம், வாருங்கள், நேரமாய்விட்டது.

**கைடீரியஸ்** :—ஐயோ! நான் முற்றிலும் களைத்துப் போய்விட்டேன்,

**ஆர்விராகஸ்** :—இன்று அடைந்த சிரமத்தினுல் பலவீனமாய்ப் போய்விட் டேன். பசியோ நரம்பைத்தின்னுகிறது.

**கைடீரியஸ்** :—குகையில் பழைய மாம்சமிருக்கிறது. இப்பொழுது கொண் டுவந்ததைத் தயார்செய்கிறதற்குள், அதைச் சந்தோஷமாய்ச் சாப்பி டுவோம்.

**பேலாரியஸ்** :—(குகைக்குள்பார்த்து) நில்லுங்கள், உள்ளேவரவேண்டாம். உள்ளே யாரோ ஒருவன் இருக்கிருன். அவன் நம்முடைய மாம்சத் தைப் புசித்திராமற்போனுல் அவனை ஒருதெய்வமென்று சொல்லலாம்.

**கைடீரியஸ்** :—பிதா, விசேஷமென்ன!

**பேலாரியஸ்** :—பிரகஸ்பதியின்பேரில் ஆணையிடுகிறேன்; இவன் தெய்வதூத னே, அல்லது உலகத்திலுள்ள தெய்வத்துக்குச் சமானமானவனே தெரியவில்லையே. ஆ! அவனிடத்திலுள்ள தெய்வத்தன்மையைப் பார், சிறுபிள்ளையாகத் தானிருக்கிருன்—

[இமொஜன் வெளியிலே வருகிருள்.]

**இமோஜன்** :—பிரபுக்களே! புண்ணியவான்களே! என்னை உபத்திரவப்படு த்தவேண்டாம்; நான்குகைக்குள் போகிறதற்குமுன் கூப்பிட்டேன். யாராவதிருந்தால் கொஞ்சம் தின்பண்டங்களையாசித்தாவது, அல் லது விலைக்குவாங்கியாவது சாப்பிடலாமென்று நினைத்திருந்தேன். கூப்பிட்டதற்கு ஒருவரும் பதில்சொல்லவில்லை.. குகைக்குடையவர்

கள் வந்தபின் சாப்பிடலாமென்று நினைத்திருந்தேன். பிரயோசன மில்லாமற் போய்விட்டது ; ஏனென்றால் நான்பசியினால் வாடித்துடித் துப்போனேன். நான் ஒன்றையும் அபகரிக்கவில்லை. இவ்விடத்தில் நவரத்னங்களை வெளியிலே போட்டிருந்தாலும் அதைக்கவர்ந்து போக என்மனம்இசையாது. நான் சாப்பிட்டதின்பண்டங்களுக்கு இதோபணம் எடுத்துக்கொள்ளுங்கள். நான்சாப்பிட்டவுடன் பணத் தைஇவ்விடத்தில் வைத்துவிட்டுப்போயிருக்க வேண்டியது. அதிக மாகக் களைத்துப்போனதினால்இதைவிட்டுப்போகவில்லை. தயவுசெய்து இந்தப்பணத்தை யெடுத்துக்கொண்டு அனுதியாகவந்த என்னை க்ஷமிக்கவேணும்.

கைடீரியஸ் :—சிறுவனே ! பணமா ? பணமென்றால் என்ன, பிதா ! இச்சிறு வன் பணம்தருகிறேனென்று சொல்லுகிறான் பணம்என்றால் என்ன ?

பெலாரியஸ் :—பணம்,செம்பு, பொன், வெள்ளியினால் செய்யப்படுகின்றது. உலகத்தில் ஒரு பதார்த்தம் வேணுமானால் பணத்தைக்கொடுத்து வாங்குவார்கள். இச்சிறுவனும் நம்முடைய மாம்சத்தைத்தின்றதி னால் பணம்தருகிறேனென்று சொல்லுகிறான்.

ஆர்விராகஸ்:—தங்கமும் வெள்ளியும் யாருக்குவேணும். அவைகள் தூளைப் பார்க்கிலும் அதிகபிரயோசனமற்றதாக நினைக்கிறோம். எங்களுக்குப் பணம்வேண்டாம். நீயேயெடுத்துக்கொள்.

இமொஜன் :—கோபித்துக் கொள்ளவேண்டாம் ; நான் அப்பொழுது சாப் பிடாமலிருந்தால் நிச்சயமாய் இறந்து போயிருப்பேன்.

பெலாரி :—எங்கேபோகிறதற்கு வந்தாய் ?

இமோ :—மில்போர்ட்ஹேவனுக்கு.

பெலாரி :—உன் பெயர் என்ன ?

இமொஜன் :—ஐயா! என் பெயர் பைடிலி. என்னுடைய சிநேகிதன் ஒருவன் இட்டாலிக்குப் போகவேணுமென்று புறப்பட்டு மில்போர்ட்ஹேவனில் தங்கியிருக்கிறான். நான் அவனைப்பார்க்கப்போகிறபோது வழியில் பசியினால் அதிக வருத்தப்பட்டு இக்குற்றத்தைச் செய்தேன்.

பெலாரி :—பிள்ளாய் ! வசிக்கிற இடத்தைப்பார்த்து, நாங்கள் சாட்டுமனி தர்களென்றும், எங்களிடத்தில் நல்ல குணங்கள் கிடையாதென்றும் நினைக்கவேண்டாம்; நல்ல சமயத்தில் இங்கேவந்தாய், இராத்திரியாய் விட்டது. இதைவிட்டுப்புறப்படு முன் உனக்கு நல்லவிருந்து செய்ய வேணும். அதைச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். பிள்ளைகளே ! இவ னுக்கு உபசாரம் செய்யுங்கள்.

கைடீரியஸ் :—வாலிபனே! நீ ஒரு பெண்ணுய்ப் பிறந்திருந்தால் உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள எவ்வளவுதூரம் கெஞ்சி ஒரு வேலைக்காரனைப்போல உனக்குப் பணிவிடைகள் செய்வேன்.

ஆர்விராகஸ் :—இவன் ஒரு ஆண் என்று மனதில் சமாதானப்படுத்திக் கொள்ளுகிறேன். ஏனென்ருல் பெண்ணுனல் கலியாணஞ்செய்து கொள்ள, என் சகோதரன் சொன்னபடி அதிகக்கஷ்டப்பட்டு உழைக்கவேணும். ஆணுயிருந்தால் இப்பொழுது அவனை சீக்கிரத்தில் இஷ்டனுகவைத்துக்கொண்டு அதிகப்பிரியமாயிருப்பேன். அனேக காலமாக நம்மைவிட்டுப் பிரிந்து திரும்பிவந்தவனுக்கு எவ்வளவு உபசாரம் செய்யவேணுமோ அவ்வளவு உபசாரம் இவனுக்கும் செய்யவேணும். சந்தோஷத்துடனிங்கேயிரு, நீ மித்திரர்களிடத்திலிருக்கிறதுபோல நினைத்துக்கொள்.

இமோஜன் :—(தனக்குள் சொல்லுகிருள்) இவர்கள் என்னுடைய சகோதரர்கள் தானே தெரியவில்லையே, அப்படியானுல் பாஸ்துமஸ் வேறே யாரையாவது கலியாணம் பண்ணிக்கொள்ளவேணும். ஏனென்ருல் அவன் நினைத்தபடி நான் பட்டஸ்திரீயாக மாட்டேன்.

பெலாரி :—ஐயோ! அவன் எதையோ நினைத்து வருத்தப்படுகிருன்.

கைடீ :—அந்த வருத்தத்தை நான் தீர்க்கிறேன்.

ஆர்விராகஸ் :—என் உயிருக்கு அபாயம்வந்தாலும் நான் அதைத்தீர்க்கத் தயாராயிருக்கிறேன்.

இமோஜன் :—இவ்விருவர்களுக்குச் சமானமாக உலகத்தில் ஒருவரையும் காணமுடியாது. பாஸ்துமஸ் எனக்குத் துரோகஞ் செய்ததினுல் என்ரூபத்தைமாற்றி இவர்களுடைய தோழனுக விருக்கிறதினுல் தான் என்ன? ஒரு தோஷமுமில்லை.

பெலாரியஸ் :—பிள்ளைகளே! நாம் கொண்டுவந்த மாம்சத்தைப் பாகஞ்செய்து சாப்பிடுவோம். பசியுடன் பேசிக்கொண்டிருக்கவேண்டாம் உண்டபின் உன் வரலாற்றைக் கேட்கிறேம் என்றுசொல்லி பசியாற உண்டு இன்புடனிருந்தார்கள். அடுத்தநாள் சாலையில் வழக்கப்படி இம்மூவர்களும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது,

பெலாரியஸ்:—(இமொஜனைப்பார்த்து.) உனக்கு உடம்பு சௌக்கியமில்லை. நீ இந்தக்குகையிலே இரு, எங்கள் கூடவரவேண்டாம். நாங்கள் வேட்டையாடிச் சீக்கிரம் இங்கே வருவோம்.

**ஆர்விராகஸ் :**—(இமொஜனைப்பார்த்து) இங்கே தங்கியிரு, தம்பி ! நாங்கள் போகிற இடத்துக்கு நீ வரவேண்டாம். நாம் சகோதரர்கள் அல்லவா. நான் சொல்வதைத் தயவு செய்து கேள்.

**இமோஜன் :**—மனிதர் களெல்லாரும் சகோதரர்கள் தான். களிமண் ஒன்றுக்கொன்று வித்தியாசப் படுகிறது. ஆனால் அவைகளின் பொடிகளெல்லாம் ஒன்றுதான் ; அதே மாதிரியாக நாமெல்லாரும் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தாலும் கடைசியாக நாமனைவரும் சகோதரர்கள்தான். எனக்கு உடம்பு சௌக்கியமில்லை, ஆகையால் நான் இங்கே இருக்கிறேன். நீங்கள் வேட்டையாடி வாருங்கள்.

**கைடீரியஸ் :**—நீங்கள் வேட்டைக்குப்போங்கள். நான் இவனுக்குத் துணையாக இங்கேஇருக்கிறேன்.

**இமோஜன் :**—நீஇங்கே இருக்கும்படியாய் அவ்வளவுவியாதியஸ்தனுயில்லை. என்னைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். வியாதிவருகிறதற்குள் இறந்து போகும்படியாய் அவ்வளவு சுகத்தில் வளரவுமில்லை. ஆகையால் என்னை நீங்கள் விட்டுவிட்டுப்போகலாம். வழக்கப்படி உங்கள் காரியங்களை நிறைவேற்றுங்கள். எனக்கு சௌக்கியமில்லை ; நீங்கள் கிட்ட இருந்தாலும் சுகமாகப்போகிறதில்லை. என்னைப்பற்றிக்கவலைப் படவேண்டாம். என்பேரில் நம்பிக்கையுடன் போங்கள். என்னைத் தவிர வேறொன்றையும் இவ்விடத்திலிருந்து நான் அபகரிக்கமாட்டேன். நீங்கள் வேட்டைக்குப்போய் வாருங்கள்.

**கைடீரியஸ் :**—நான் உன்னைநேசிக்கிறேன், உன்னிடத்திலும் சொன்னேன். என்பிதாவிடத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேனோ, அதே மாதிரியாக உன்னிடத்திலும் பிரியமாயிருக்கிறேன்.

**பெலாரியஸ் :**—என்ன சொன்னுய் ! எப்படி !! எப்படி !!!

**ஆர்விராகஸ் :**—கைடீரியஸ் சொன்னது பாவமானால், நாங்கள் இருவரும் ஒரேகுற்றத்துக்குள்ளாகிறோம். இவனிடத்தில் ஏன் இவ்வளவுபிரியமாயிருக்கிறேனென்று எனக்கேதெரியவில்லை. பிரியத்துக்குக்காரணமில்லையென்று அனேகந்தரம் நீங்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறீர்கள். கையில்வாளைவைத்துக்கொண்டு, என்னிடத்தில் பிதா இறக்கவேணுமோ அல்லது இந்தப்பையன் இறக்கவேணுமோ வென்று கேட்டாலும், என்உயிரைவெறுத்து கொஞ்சமாகிலும் அச்சமின்றி என் பிதா இறந்துபோகட்டும், இவனைக் காப்பாற்றவேணுமென்று நிச்சயமாய்ச் சொல்வேன். பிதா இதற்காக என்னைக் கோபித்துக்கொள்ள வேண்டாம்.

பெலாரியஸ் :—(தனக்குள் சொல்லுகிறான்) ஆ! என்ன பெருந்தன்மையான குணம்! இயற்கையின் செல்வமே!! பெருந்தன்மையின்வடிவே!!! "இனம் இனத்தோடு வெள்ளாடு தன்னோடு" என்ற பழமொழி இப்பொழுது தான் தெரிகிறது. உலகத்தில் நல்ல அன்னமும், உமியும், அனுக்கிரகமும், நிந்தித்தலும் உண்டு. நான் அவர்களுடைய பிதா அல்ல. ஆனால் இந்த மனிதன் யாரோ தெரியவில்லை. என்னிடத்தில் இருக்கவேண்டிய பிரியத்தைப் பார்க்கிலும் இவனிடத்தில் அதிகப் பிரியமாயிருக்கும்படி செய்த இந்த மகானுபாவன் யாரோ தெரியவில்லையே.

ஆர்விராகஸ் :—தம்பீ ! நான் வேட்டையாடி வருகிறேன்.

இமோஜன் :—சந்தோஷமாய்ப் போய்வாருங்கள்.

ஆர்விராகஸ் :—உன் உடம்பை நன்றாய்ப் பார்த்துக்கொள் இதோ சீக்கிரம் வந்துவிடுகிறோம்.

இமோஜன் :—[தனக்குள் சொல்லுகிறாள்] இவர்கள் எவ்வளவு பக்ஷமாயிருக்கிறார்கள். தெய்வமே! உலகத்தார் கடும்பொய் சொல்லுகிறார்கள்! அரண்மனையிலுள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நல்ல குணங்கள் கிடையாது, காட்டு ஜனங்களுக்குண்டான குணங்கள்தான் உண்டென்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். உலகப் பயிற்சியானது இதற்கு நேர் விரோதமாக ருஜுக்காட்டுகிறது. பெரிய கடல்களில் பெரிய மீன்களைக் காணலாம். ஆனால் சாப்பிடுகிறதற்கு உபயோகப்படுகிற மீனோ சிறு ஆறுகளிலிருந்துதான் கிடைக்கிறது. அதேமாதிரியாக இச்சிறுவர்களுடைய குணங்களையும் இப்பொழுது கண்டேன். ஐயோ! உலகத்தார் என்ன அநியாயவார்த்தைகளையும் பொய்யையும் சொல்லுகிறார்கள். எனக்கு மனோவியாதி பிடித்துவிட்டது. பிஸானியோ ! நீ தந்த மருந்தில் கொஞ்சம் சாப்பிடுகிறேன்.

(கொஞ்சம் சாப்பிடுகிறாள்.)

கைடீரியஸ் :—அவனுடைய சரித்திரத்தைச் சொல்ல அவனுக்கு மனம் இசையவில்லை. ஆனால் அவன் ஒரு பெரிய குடியிற்பிறந்து, அதிர்ஷ்டமில்லாமல் போனதாய்ச் சொன்னான்; துரோகிகளால் இந்த ஸ்திதியிலானான். நல்லயோக்கியன்.

பெலாரியஸ் :—காட்டுக்குப் போங்கள். குழந்தாய் ! உன்னைவிட்டுப்போய் வேட்டையாடிச் சீக்கிரம் வருகிறோம். உள்ளேபோய் உன்களைப்பைத்தீர்த்துக்கொள்.

ஆர்விராகஸ் :—நாங்கள் சீக்கிரம் திரும்புவோம்.

பெலாரியஸ் :—நீ அதிகவியாதியஸ்தனைகப்போகக்கூடாது. ஏனென்றால் எங்களுக்கு வீட்டுக்காரியங்களைச் செய்து சந்தோஷத்தைத்தரவேணும்.

இமோஜன் :—வியாதியாயிருந்தாலும், சௌக்கியமாயிருந்தாலும், உங்களுக்கு இந்தவேலையைச் செய்யக்கடமைப்பட்டிருக்கிறேன், செய்யவும் தயாராயிருக்கிறேன்.

பெலாரியஸ் :—(இமொஜன் குகைக்குள் போகிறாள்) இந்தப்பையன் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், நல்லவம்சத்தில்பிறந்தவனென்று தோன்றுகிறது.

ஆர்விராகஸ் :—தெய்வப்பெண்ணைப்போல் இவன் நம்முடைய மாம்சாதிகளைத்தயாராக்குகிறான்.

கைடீரியஸ் :—நம்முடைய பதார்த்தங்களையும், கிழங்குகளையும் வினோதமாய்த்துண்டித்து வெகுநேர்த்தியாகப் பாகஞ்செய்கிறான். இவ்விதம் பாகஞ்செய்ததை இதுவரையில் நான் கண்டதேயில்லை.

பெலாரியஸ் :—நாழிகையாய்விட்டது வாருங்கள் சீக்கிரம். [இப்படி பேசிக்கொண்டு சிறிது தூரம் போகும்போது, ஓரிடத்தில் க்லோட்டனைச் சந்தித்தார்கள். அவன் அங்கேவந்தவிஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகச்சொல்வோம்.]

வி. கோபால ஐயங்கார் பி.எ.

---

## இந்தியா மாதர்களுக்கு ஒரு ஆங்கிலப்பத்திரிகை.

ஜூலைமீ முதற்கொண்டு இந்தியமாதர்களுக்கென்று ஓர் தனிமையான மாதாந்திரப்பத்திரிகை ஆங்கிலத்தில் மிஸ்ஸஸ் சத்தியநாதன் எம். ஏ. அவர்களால் பிரசுரிக்கப்படும். சுயபாஷையில் வெகுசில பத்திரிகைகள்தானிருக்கின்றன. அவைகளை மிகசொற்பஜனங்கள் வாங்கிபடித்து வருவதால் இந்தியாவிலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் உபயோகமானதல்ல. புருடர்கள் ஆங்கிலத்தில் விருத்தியடைந்து வருவதுபோலவே சில ஸ்திரீகளும் கல்வியில் விருத்தி அடைந்து வருகிறார்கள். ஸ்திரீகளில் பெரும்பான்மையோர் படிக்காதவர்களாயிருந்த போதிலும் சிறுபான்மையோர் ஆங்கிலம் கற்று யூனிவர்சிடி பரீக்ஷைகளிலும் தேறி கௌரதபட்டங்களையும் பெறுகிறார்கள். இவர்களாலே மற்ற பெண்மணிகளுக்கு பற்பல உதவிகள் செய்யப்படும்; இவர்களுக்கு ஒரு பத்திரிகை தனிமையாக யிருந்தால் மிகவும் நல்லது. இந்த பத்திரிகையில் இந்தியா ஸ்திரீகளைக்குறித்து அக்கரை எடுத்துகொள்கிற ஐரோப்பிய மாதர்கள் தங்கள் சகோதரிகளின் அபிவிருத்தியைப்பற்றி பற்பல மார்க்கங்களில் உழைத்தும்

பாடுபட்டும்வருகிறார்கள். இந்த பத்திரிகை இந்தியமாதர்களுக்கும்நமக்காக உழைத்துவரும் ஐரோப்பியமாதர்களுக்கும் உபயோகமுள்ளதாகும். கல்வி, நாகரிகம், ஜனோபகாரம், முதலியவைகளின் விருத்தாபிவிருத்தி முதலியவைகளும், இந்து சாஸ்திரத்தில் சொல்லிய ஸ்திரீகளின் தர்மமும் எழுதப்படும். இந்திய ஸ்திரீகளின் நடவடிக்கைகள் கதா பூர்வமாகவும் எழுதப்படும். ஐரோப்பிய ஸ்திரீகள் இந்திய ஸ்திரீகளுக்காக செய்து வரும் ஜனோபகாரமான காரியங்களும், இந்திய ஸ்திரீகளால் தங்கள் சகோதரிகளுக்குச் செய்துவரும் நன்மையான விஷயங்களும் பிரசுரிக்கப்படும். இந்து மனைவிகளும் தாய்மார்களும் செய்யவேண்டிய உபயோகமான காரியங்களும், குடும்பவிஷயமான விஷயங்களும், பாகசாஸ்திரம், தையல்வேலை, குழந்தைகளைப் பாதுகாத்தல் முதலியவைகளும் வெகுஜாக்கிறதையாக எழுதப்படும், இதை யாவரும் விருத்தி செய்வார்கள் எனநம்பப்படுகிறது.

வேண்டியவர்கள் "இந்தியன் லேடிஸ் மேகாஸின் மானேஜர் ராயப்பேட்டை சென்னை" என்று எழுதவேண்டும். இது 24 பக்கங்களடங்கிய ஒரு புஸ்தகமாகவிருக்கும். இதன் வருட சந்தா 4 ரூ.

---

## தெனாலிராமன் கதை.

### I

### விகடகவியானவிதம்.

வடதேசத்தில் தேனாலு யென்றவூரில் இராமன் என்று ஒரு பிராமணப்பிள்ளைபிறந்தான். ஒரு நாள் ஒரு தெருவிலே ஒரு சந்நியாசி இவனைக் கண்டு, இவனுடைய ரூபத்தையும், குணாதிசயத்தையுங் கண்டு ஆச்சரியப்பட்டு ஒருமந்திரத்தையுபதேசம்பண்ணியபின் "அப்பா! மகனே! இந்த மந்திரத்தை மூன்றுகோடிதரம் ஒரு இராத்திரியிலே காளியம்மன் கோயிலிலே போய் ஜெபித்தாயானால், ஆயிரமுகத்துடன் அம்மன் உனக்குப் பிரத்தியட்சமாவாள். அப்பொழுது நீ அவளைக்கண்டு பயப்படாமல் இருந்து வேண்டியவரங்களைப் பெற்றுக் கொள்" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். இராமன் அன்று முதல் தன்னூருக்கருகாமையிலுள்ள காளிகோவிலுக்குப்போக நல்ல வேளைப்பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு நல்ல தினத்தில் காளிகோவிலுக்குள்ளேபோய் அந்த சந்நியாசி உபதேசித்தமாதிரி ஜெபம் பண்ணினான். பத்திரகாளியானவள் ஆயிரமுகம், இரண்டுகையுமாகப் பெரிய பயங்கரமான ரூபத்தை யெடுத்துக்கொண்டு பிரசன்னமானாள். அப்போது மிகுந்த தைரியமுடையவனாகிய அச்சிறுவன் அவள் கோரத்தைப் பார்த்து அஞ்சாமல் நகைத்தான். "ஏண்டா நகைக்கிறாயென்று" பயங்

கரமான தொனியுடன் காளி கேட்டாள், "அம்மா! மனிதர்களாகிய எங்களுக்கு ஒரு மூக்குக்கு இரண்டு கைகளிருந்துஞ் ஜலதோஷங்கண்டால் சிந்த வருத்தமாயிருக்கிறது. உமக்கு ஆயிரமுக மிருக்கிறபடியால் ஒருவேளை ஜலதோஷங்கண்டால் இரண்டு கையினாலே இந்த ஆயிரமூக்குகளையும் எப்படி சிந்துவாய்," என்று இராமன் மறுமொழி பகர்ந்தான். விகடமாய் சொன்ன பையனது வார்த்தையினால் சந்தோஷப்பட்டு "அடா பையா! நீ என்னைப்பார்த்து விகடம் பண்ணினபடியால் நீ இன்று முதலாக விகடகவி யாகப் போகக்கடவாய்" என்று பத்திரகாளி சொன்னாள். "மகாதேவி, ஆ! ஆ!! நல்லவரங் கொடுத்தாய்!!! வலதுபக்கத்திலிருந்து இடதுபக்கம் வரையிலும் பார்த்தாலும் விகடகவிதான். இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கம் வரைக்கும்பார்த்தாலும் விகடகவிதான்" என்று தைரியமாக உடனே சொன்னான். இவ்விதம் இச்சிறுவன் சொன்னதைக் கேட்டு மிகமகிழ்ந்து இவன்மேல் இரக்கம் வந்து "உன்னுடைய புத்திக்குச் சரியாகவே இராஜசபை மெச்சும்படியான விகடகவி யாயிருக்கக்கடவாயென்று," சொல்லியபின் மறைந்து போய் விட்டாள். அன்று முதல் இவன் விகடம் செய்வதிலேயே வெகு சமர்த்தனாகி இராய*ரிடத்திலே போய்ச் சேர்ந்து ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தான்.

---

## இந்தியாவிற் பெண்களின் தொகை யேன் அதிகப்படவில்லை.

"இந்த வருஷம் எடுக்கப்பட்ட ஜனத்தொகைக் கணக்குப்படி கிரமமாய் அதிகமாயிருக்க வேண்டிய ஜனத்தொகையில் சுமார் 300 லட்சம் ஜனங்கள் கம்மிப்பட்டிருத்தல் காணப்பட்டது. இதற்குப் பஞ்சமும் விஷசுரமும் கொஞ்சக்காலமாக ஜனங்களை விடாது பீடித்து வருகிறதே காரணமென்று சொல்லப்படுகிறது. மேலும் சென்ற 20 வருஷக்காலமாகத் தேசத்தில் சகலசாமான்களும் விலைகளேறி விற்பதால் ஏழைகள் ஜீவனம்செய்வதே கஷ்டமாயிருக்கிறது. அவர்கள் கலியாணம் செய்து கொள்ளுவது அருமையாகி, அப்படிக் கலியாணம் செய்து கொண்டாலும், சரீரபுஷ்டியில்லாமற் பிரஜோற்பத்தியும் உண்டாவதில்லை. இப்படிப்பல துக்ககரமான காரணங்களால் ஜனாபிவிருத்தி குறைந்திருந்தாலும், பெண்களின் விருத்தியே அதிகமாகக் குறைந்திருக்கிறதாகத் தெரிகிறது. பொதுவாய் நாகரீகமும் செழிப்பும் நிலைத்திருக்கும் தேசங்களில் ஆண்களைவிடப் பெண்களே அதிகப்பட்டிருப்பது வழக்கம். இந்தியாவிலோ விபரீதமான நிலைமையுண்டாயிருப்பதற்குப் பலபேர் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். லண்டன்நகரத்தில் குளோப் (Globe) என்ற கன்ஸர்வேடிவ் பத்திரிகை எப்

* இராயர்:—விஜயநகர இராஜவம்சத்தைச்சேர்ந்த ஒரு அரசன், இவர் ஹம்பி என்ற ஊரில் கி.பி. 16 வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசாண்டு வந்தவர்.

போதும் இந்தியர்களின் சார்பாகப் பேசுகிறதில்லையாகையால், இப்படிப் பெண்களின் தொகை குறைவதற்கு இந்துக்களின் ஆசாரங்களே காரணமென்கின்றது. இந்தப் பத்திரிகையானது, போன வருஷம் மிஸ்டர் பாலகங்காதர திலகரை ராஜத்துவேஷி யென்றும், சதியோசனைக்காரரென்றும் சொன்னதற்காக, மிஸ்டர் திலகர் லண்டன் கோர்ட்டில் வெகு பணம் செலவு செய்தும் வெகு சிரமப் பட்டும் குற்றவழக்குத் தொடர, பத்திராதிபர் தாம் சொன்னது பிசகு என்று ஒப்புக்கொண்டு விசனப்பட்டதுந்தவிர, சொற்பத் தொகை மிஸ்டர் திலகருக்கு மான நஷ்ட ஈட்டுக்காசக் கொடுத்தார். இந்தப் பத்திரிகை, இந்தியர்வில் நல்ல குடும்பங்களில் பெண்களால் விசேஷச் செலவும் துக்கமும் நேரிடுகிறபடியால், பெற்றோர் பெண்களைக் கொன்று விடுகிற வழக்கமே பெண்களின் விருத்திக் குறைவுக்குக் காரணமென்று அபிப்பிராயம் சொல்லுகிறது. இந்த அபிப்பிராயமானது எழுதினவருடைய மூடத்தனத்தைத் தெரிவிக்கின்றதேயன்றி, அறிவைத்தெரிவிக்கவில்லை. சுமார் 100-வருஷங்களுக்கு முன்னால் வட இந்தியாவிலுள்ள ராஜ புத்திர சாதியாருள்ளும் வேறு சில மிலேச்ச சாதியாருள்ளும் இந்த வழக்கமிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. சுமார் 60-வருஷத்துக்கு முன்னால் பிரிடிஷ் ராஜாங்கத்தார் இந்த வழக்கத்தைப் பலாத்காரமாய் நிறுத்திவிட்டார்கள். அந்தக்காலம் முதல் இப்பேர்ப்பட்ட கோரமான வழக்கம் அடியோடு நின்றே போய்விட்டது. அக்காலத்திலுங் கூட இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் இந்த வழக்கமிருந்ததில்லை; இப்போது அது எங்குமேயில்லை. போன கானிஷ்மாரிக் கணக்குப்படி கல்கட்டா, பம்பாய், ரங்கூன், முதலான நாகரீகம் முதிர்ந்த முக்கிய பட்டணங்களில்மட்டும் 6 லட்சம் பெண்கள் குறைவாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட பட்டணங்களில் பெண்களின் கொலை நேரிடுவதேயில்லையானால், இந்தப் பாதகச் செய்கையே இந்தியாவில் ஸ்திரீ பிரஜாபிவிரித்திக் குறைவுக்குக் காரணமென்பது உண்மையாகமாட்டாது. உண்மையில் இப்படி நேரிடும் குறைவுக்குக் காரணம், நமது அபிப்பிராயப்படி, பெண்கள் கேவலம் இளம்பிராயத்திலேயே தாய் நிலைமை பெறுவதேயன்றி வேறல்ல. சராசரி 14-வது வயதில் இந்தியப் பெண்கள் குழந்தைகளைப் பெற ஆரம்பிக்கிறார்கள். 14-வது வயதில் சரீரம் முதிர்ச்சி பெறாமல் பிஞ்சாயிருப்பதால், கர்ப்பமாகும் பெண்களில் வெகுபேர் பிரசவகாலத்தில் இறந்து போகிறார்கள். முதல் பிரசவத்திலேயே பலவித அபாயங்கள் நேரிட்டு மரித்துப் போகும் பெண்கள் அநேகர். முதல் பிரசவ விபத்தைத் தாண்டின போதிலும், இரண்டாவது மூன்றாவது பிரசவங்களுக்குள்ளாகப் பலவித ரோகங்கள் நேரிட்டுப் பெண்களைக்கொன்று விடுகின்றன; அல்லது ரோகங்களுக்குத் தப்பினாலும் யௌவனம் என்று கிரமமாய்ச் சொல்லவேண்டிய காலத்திலேயே கிழத்தனம் வந்து இறந்துபோகும் பெண்களும் பலருண்டு. இப்படிச் சாதாரணமான நல்ல குடும்பங்களிலேயே நேரிடுகிறதென்றால், ஏழைக் குடும்பங்களில் விசேஷமாகவே நேரிடுமல்லவா? ஸ்திரீகள் கர்ப்பமாயிருக்குங் காலத்தில், முக்கியமாய் முதல்தடவை கர்ப்பமாயிருக்கும் போது, அவர்களுடைய சரீரஸ்திதி வெகு மெலிவுகொண்டிருக்குமாகையால், ஆழ்ந்த கவலையுடன் அதைக் கவனித்து வரவேண்டும். தகுந்த ஆகாராதிகளும், தகுந்த ஔஷதங்களும், மனசுக்கு உற்சாகமான வாழ்வும் கர்ப்பிணிகளுக்கு

மகா அவசியம். இவைகளைக் கவனிக்கத் தெரியாமலும், தெரிந்தாலும் அவசியமான செலவைச் செய்யச் சக்தி யின்றியும், வெகு பெண்கள் பாலியத்திலேயே இறந்து போகிறார்கள். மேலும் நமது தேசத்திற் பெண்ணாய்ப் பிறந்த ஒவ்வொரு மனித சீவனும் சமுசார வாழ்க்கையை யேற்றே தீரவேண்டுமல்லவா? மேற்குத் தேசங்களில் இந்தக் கட்டாயமில்லை? இஷ்டமிருந்து மற்ற வசதிகளும் ஒத்து வந்தால் விவாகம் செய்துகொள்ளு வார்கள்; இந்த இரண்டு மில்லாத அநேக ஸ்திரீகள் கலியாணமில்லாமல் ஆயுள்பரியந்தம் சும்மாவிருந்துவிடுவார்கள். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள், கடவுள் செயலாய் நேரிடும் ஆபத்துக்களைத்தவிர, வேறு காரணங்களால் இறப்பது சாதாரணமல்ல. தவிர, அத்தேசங்களில் ஸதிரீகள் சரீர சௌக்கியமும் போஷணையும் செய்துகொள்ளுவதில் புருஷரைப்போலவே கவலைகொண்டிருக்கிறவர்கள். நமது தேசத்தில் ஸ்திரீகள் வீட்டுக்குள் அடைத்துக்கிடந்து நல்லகாற்று நல்ல சரீரப் பயிற்சி முதலான நன்மைகள் பெறக்கூடியவர்க ளல்ல. மேலும் நல்ல சாப்பாடும் புருஷர்களுக்குக் கிடைப்பது போலக் கிடைப்பதில்லை. வியாதி வந்தாலும் நமது ஸ்திரீகள் உடனே வெளியிடுவதில்லை; வெளியிட்டாலும் புருஷர்கள் அதிகக் கவலைப்படுவதில்லை. இப்படிப் பலவிதங்களிலும் ஸ்திரீகளுடைய தீர்க்காயுளுக்கு விரோதமான வழக் கங்களும் பழக்கங்களும் உண்டாயிருப்பதே ஸ்திரீ பிரஜாபிவிருத்தி புருஷப் பிரஜாபிவிருத்தியைவிடக் குறைவுபட்டி ருக்கிறதற்குக் காரணம்." சு.மீ.

---

## விடுகதை.

1. கூத்திதனக்கே யலைவான் குடியனல்ல குலமில்லாக் குலம்புகுந் தான்யிடியனல்ல, வாத்திதனையே படித்தான் வம்பனல்ல மயில்கோழி மிக வளர்த்தான் மறவனல்ல, தேற்றுந்தேன் தினையுண்டான் வேடனல்ல, திகழ்வேடந்தான் தரித்தான் சித்தனல்ல, பூத்தமலர்க்கணையுடையாள் தேவி யாளோ பண்மயிலே இக்கதையை புகலுவாயே.

2. பிள்ளைகளைப் பெருக்கமாய்ப் பெற்றுவளரவளரப் பக்ஷணம் பண்ணும் பெருநீலித் தாய்யவள்.

3. ஒருவனுக்குத் தேகத்தில் எலும்பு தசையில்லை சிரசில்லை, கையுண்டு, விரலில்லை நித்தியபுருஷ ஆகாரம்தினம் கிராமசஞ்சாரம்.

பாரதிஅம்மாள்.

I. எறநழுவுமரம் இலைசுருளுமரம் காய்துவர்க்குமரம் பழம் இனிக்குமரம் என்னமரம்.

II. படமெடுத்தே நின்றாடும் பாம்புமல்ல, ஆகாயத்திலே பறக்கும் கெருடனுமலல, நாலுபக்கம் சட்டமுண்டு வீடுமல்ல நண்பரே இக்கதைக் கருள் கூர்வீர்.

III. முட்டையிடும் சட்டைகளத்தும் மூன்றுமாசம் அடைகிடக்கும் நாக்கை நீட்டும் படமெடுக்கும் நாயினாணை பாம்புமல்ல.

ஞானவடிவுடையம்மாள்.

---